In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 163/2023

Prosecution witness P.W.3

Name: Dinesh Pandian

Calling:

Father Name:

Religion:

Village:

Caste:

Taluk:

Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 15-04-2025.

**(Accused 1 produced through V.C. A4, 6 are produced. A3, A5, A7, A8, A9 are present.)**

முதல் விசாரணை :-

நான் திண்டுக்கல் குமரன் திருநகரில் குடியிருக்கிறேன். பைனான்ஸ் தொழில் செய்கிறேன். அசா1 மற்றும் 2ஐ தெரியும். காணொளி மூலமாக ஆஜர் 1வது எதிரியையும் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள மற்ற எதிரிகளையும் தெரியாது. சம்பவத்தின் இறந்துபோன சரவணக்குமார் எனது நண்பர். 20.07.2023ம் தேதி அண்ணா நகர் தைலக்காட்டில் நாங்கள் ஒரு 20 பேர்கள் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்தோம். மாலை 6.30 மணியளவில் சரவணக்குமார் அவரது குழந்தையை தூக்கிக்கொண்டு வந்தார். அவரும் விளையாடினார். இரவு 7, 7.15 மணியளவில் சரவணக்குமார் அவரது குழந்தையுடன் இருசக்கர வாகனத்தில் முன்னால் சென்றார். கால் மணி நேரம் கழித்து நானும் பாலாஜியும் ஒரு இருசக்கர வாகனத்தில் சென்றோம். விமலா ஆஸ்பத்திரி பக்கம் நாங்கள் சென்றபோது சரவணக்குமார் சென்ற இருசக்கர வண்டி கீழே கிடந்தது. சரவணனும் கீழே கிடந்தார். குழந்தை தள்ளி கிடந்தது. நாங்கள் இறங்கி போய் பார்த்தோம். சரவணன் தலையில் வெட்டுப்பட்டு இறந்துகிடந்தார். நாங்கள் சுதன்பிரபுவை வரச்சொல்லி குழந்தையை கொடுத்து அவரது வீட்டில் கொண்டுபோய் கொடுக்கச்சொன்னோம். ஆம்புலன்ஸ் வரும்வரை நாங்கள் அங்கு நின்றிருந்தோம். அங்கு நிறைய கூட்டம் கூடியது. சரவணனின்

மனைவியும் அம்மாவும் வந்தார்கள். ஆம்புலன்ஸ் வந்தபின்பு சரவணனின் உடலை ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனை கொண்டு சென்றார்கள். நாங்கள் திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்றோம். அங்கு வைத்து போலீசார் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். சரவணக்குமாரை வெட்டியதை நான் நேரில் பார்க்கவில்லை. யார் வெட்டியது என நான் நியுசை பார்த்துதான் தெரிந்துகொண்டேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாகக் கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதிக்கப்பட்டது)
குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

போலீசார் என்னை விசாரித்தபோது, 20.07.2023 ம் தேதி மாலை சுமார் 05 மணியளவில் எனது நண்பர் விக்னேஷ், சுதன்பிரபு, பாலாஜி மற்றும் சிலரும் தைலக்காடு கிரவுண்டில் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்தபோது 06.30 மணியளவில் பட்டறை சரவணன் அவரது குழந்தையுடன் அவரது கருப்பு மஞ்சள் கலர் டியோ பைக்கில் வந்து எங்களுடன் கொஞ்சநேரம் கிரிக்கெட் விளையாடினார்என்றும் பின்னர் 07.10 மணியளவில் விளையாட்டை முடித்து சரவணன் அவரது பைக்கில் முன்னாடி குழந்தையை வைத்துக்கொண்டு கிளம்பினார் என்றும், பின்னாடியே நான் பாலாஜியின் பைக்கில் ஏறிக்கொண்டு அண்ணனுக்கு பின்னாடியே சுமார் 200 மீட்டர் தள்ளி விமலா ஆஸ்பத்திரி ரோட்டில் போய்க்கொண்டிருந்தபோது விமலா ஆஸ்பத்திரியை சரவணன் அண்ணன் தாண்டினதும் ஆஸ்பத்திரி பெண்டுல நின்றிருந்த ஒரு சிவப்பு கலர் கார் வேகமாக சரவணன் பின்னாடியோ போய் சாலு ரோட்டுக்கு முன்னாடி வைத்து அந்த காரில் இடதுபக்க பின் சீட்டில் இருந்தவர் கார் கதவை திறந்து சரவணனின் பைக்கில் இடித்து கீழே தள்ளிவிடவும் அங்கு ஏற்கனவே தயாராக நின்றிருந்த மூன்று பேர் மேற்படி சிவப்பு காரிலிருந்து இருவரும் பார்த்தால் அடையாளம் தெரியக்கூடிய 5 பேர் பட்டா கத்தியுடன் ஓடி வந்து வெட்டுடா,

வெட்டுடா என சத்தம்போட்டுகிட்டே சரவணன் அண்ணனை கைகள், தலை, முகம் ஆகிய பகுதிகளில் சரமாறியாக வெட்டினார்கள், அதில் ரத்தம் தெரித்தது, அதனை பார்த்த நானும் தினேசும் பயந்துகொண்டு விமலா ஆஸ்பத்திரிக்கிட்ட அப்படியே நின்றுகொண்டோம், சரவணனின் குழந்தை அருகிலேயே அழுதுகொண்டிருந்தது பின் 5 பேரில் ஒருவர் செத்துட்டாண்டா வாங்கடா போலாம் என சொன்னதும் 5 பேரும் கத்திகளுடன் காரில் இரண்டு பேரும் ஒரு பைக்கில் இரண்டு பேரும், இன்னொரு பைக்கில் ஒருத்தனும் ஏறி விவேகாநந்தா நகர் பக்கமாக தப்பி சென்றனர் என்றும் உடனே நாங்கள் சென்று பார்த்தபோது சரவணன் அண்ணன் பின்னந்தலை சிதைந்து இறந்தநிலையில் குப்புற கிடந்தார் என்றும், குழந்தையை நானும் பாலாஜியும் தூக்கினோம் என்றும் நான் எனது நண்பர் சுதன்பிரபுக்கு போன் செய்து தகவலைச் சொல்லி வரச்சொன்னேன் என்றும், சுதன்பிரபு உடனடியாக அங்கு வந்தவுடன் குழந்தையை வாங்கி அண்ணன் மனைவியிடம் கொடுத்துவிட்டு தகவலை சொல்லி வருவதாக கூறிச்சென்றான் என்றும், பின்னர் சிறிது நேரத்தில் சரவணனின் மனைவியும், அவரது தாயார் மாரியம்மாளும் வந்தார்கள் என்றும், பின்னர் கூட்டம் கூடிவிட்டது என்றும், ஆம்புலன்சில் பிரேதத்தை ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டுசென்றார்கள் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது எதிரிகளை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**–வழக்கறிஞர்கள் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை எனக்கூறினார்கள்.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.04.15 15:54:54 +0530

Principal District Judge,
Dindigul.